தமிழ் நாடு அரசு

<u>சுருக்கம்</u>

குத்தகை — நகராட்சி/நகரியங்களுக்கான குத்தகை மற்றும் இதர வருவாய்கள் — காலதாமதமாக செலுத்தப்படும் தொகைகளுக்கு 18% அபராத வட்டி வசூலித்தல் — ஆணை வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - -

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அரசாணை (நிலை) எண். 26 நாள்: 28.1.1994

பார்வை:

1. நகராட்சி நிர்வாக ஆணையர், கடிதம் ஒ.மு.1273/93 ஏ.3 நாள்: 22.2.93

2. நகராட்சி நிர்வாக ஆணையர், ந.க.எண்.583[illegible]/93 நாள்: 17.9.93

. . . . . . . .

அலுவலகம் 29 MAR 1994 பொள்ளாச்சி

<u>ஆணை</u>:

உள்ளாட்சி நிதிக் கணக்குகள் ஆராய்வாளர், நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் நகராட்சி/நகரியங்களுக்கான குத்தகை மற்றும் இதர வருவாய்களுக்கான தொகையை ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட காலத்திற்குள் நகராட்சி கணக்கில் செலுத்த வேண்டும். கெடு தேதி முதற்கொண்டு தொகை செலுத்தப்படும் நாள் வரை மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி சேர்த்து (12%) குத்தகை தொகையுடன் அந்தந்த மாதக் கடைசிக்குள் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது என்றும், இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தண்ட வட்டித் தொகை வெகு காலத்திற்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்டதாகவும், தற்போதுள்ள சூழ்நிலையில் வங்கி மற்றும் வங்கியில்லாத நிதி நிறுவனங்கள் அளித்து வரும் வட்டி விகிதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் மேற்படி வட்டி விகிதம் மிகவும் குறைவாக உள்ளதோடு, தாமதமாக தொகை செலுத்துவோர் அதற்கான வட்டித் தொகையின் சுமையை உணரும் விகிதத்தில் போதுமான அளவில் இல்லையென்றும், இதனால் நகராட்சி மற்றும் நகரியங்களின் நிதி நிலைமையும் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இதனை தவிர்க்க இது குறித்து வெகு காலத்திற்கு முன்பே நிர்ணயிக்கப்பட்ட காலங்கடந்து செலுத்தப்படும் தொகைகளுக்கான அபராத வட்டித் தொகையின் விகிதத்தை தற்போதுள்ள நிலைக்கேற்றவாறு தொகை செலுத்துவோர் அபராத வட்டித் தொகையின் சுமையை உணரத்தக்க வகையில் தகுந்த அளவிற்கு உயர்வு செய்யவும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் ஒதுக்கீடுதாரர்கள் குறித்த காலத்திற்குள் மாதத் தொகையை செலுத்தத் தவறினால் அபராத வட்டியாக 18% செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது போன்று குறைந்தபட்சம் 18% அபராத வட்டி விதிக்க ஆணை வழங்க அரசுக்கு பரிந்துரை செய்யக் கேட்டுள்ளார். நகராட்சி நிர்வாக ஆணையர், ஆராய்வாளர் கருத்தை ஏற்று ஆணை பிறப்பிக்க அரசைக் கோரியுள்ளார்.

2. அரசு இதனை ஆராய்ந்தது. உள்ளாட்சி நிதிக் கணக்குகள் ஆராய்வாளர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோரின் பரிந்துரையை அரசு ஏற்று நகராட்சி மற்றும் நகரியங்களுக்கான குத்தகை மற்றும் இதர

ப.தி.பா.

வரவினங்களில் கால கெடுவிற்கு பின்னர் செலுத்தப்படும் தொகைக்கான அபராத வட்டி விகிதத்தை 12%-லிருந்து 18% ஆக உயர்த்தி வசூலிக்க அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை நிதித்துறை ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. பார்க்க அ.சா.கு.எண்.104405/ந.நி(ம).கு.வ./93-1 நாள்:17.12.93.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.வா.சந்திரசேகரன்
அரசு இணைச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை.5
உள்ளாட்சி நிதிக் கணக்குகள் ஆராய்வாளர், சென்னை.2
அனைத்து நகராட்சி ஆணையாளர்கள்
அனைத்து நகராட்சி நிர்வாக நகரியங்கள்

நகல்:
மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்
நகராட்சி நிர்வாகம் & குடிநீர் வழங்கல் (ம.நா.11) துறை, சென்னை.9
நிதித்துறை, சென்னை.9

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்